பக்கங்கள்: 08


# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஐப்பசி 24 புதன்கிழமை 10.11.2021 கதிர் 233

## மூன்று ஆயர்களுடன் சுவிஸ் தூதர் சந்திப்பு



(இ.கலையமுதன்)

வடக்கு, கிழக்கைச் சேர்ந்த மூன்று ஆயர்களை இலங்கை மற்றும் மாலைதீவுக் ☞2

# காரைநகர் பிரதேச சபையையும் பறிகொடுத்துள்ளது கூட்டமைப்பு

### ஈ.பி.டி.பியின் ஆதரவுடன் சுயேச்சைக் குழு ஆட்சி



(ந.லோகதயாளன், இ.கலையமுதன், எஸ். நிதர்ஷன்)

யாழ்., காரைநகர் பிரதேச சபையையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று பறிகொடுக்க ஈ.பி.டி.பியின் ஆதரவுடன் சுயேச்சைக் குழு கைப்பற்றியது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆட்சிக்குள் இருந்த காரைநகர் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் கடந்த மாதம் 21ஆம் திகதி கொரோனாத் தொற்றால் உயிரிழந்தமையையடுத்து தவிசாளர் பதவி வெற்றிடமாகக் காணப்பட்டது.

இந்நிலையில், காரைநகர் பிரதேச சபையின் புதிய தவிசாளர் தெரிவுக்கான விசேட அமர்வு வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணை ☞2



## கூட்டமைப்பு எம்.பிக்களுடன் இந்தியத் தூதர் நாளை பேச்சு

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேக்கும் இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுவினருக்கும் இடையில் நேற்று நடைபெறவிருந்த சந்திப்பு சம்பந்தனின் கோரிக்கைக்கமைய ஒத்திவைக்கப்பட்டது. அதற்கமைய இந்தச் சந்திப்பு நாளைநடைபெறஏற்பாடாகியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனை கடந்த முதலாம் திகதி அவரின் கொழும்பு இல்லத்துக்குச் ☞2




## மாமனிதர் ரவிராஜின் நினைவேந்தல்

(ந.லோகதயாளன், இ.கலையமுதன், எஸ்.நிதர்ஷன்)

சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் நடராஜா ரவிராஜின் 15ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இன்று காலை நடைபெற்றது.

சாவகச்சேரியில் ரவிராஜின் உருவச்சிலை ☞2

# 30 ஆயிரம் பேர் யாழில் பாதிப்பு



### காலநிலை சீரடைந்து வருவதால் நாளை பாடசாலைகள் ஆரம்பம்

**(இ.கலையமுதன், ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)**

**யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 9 ஆயிரத்து 105 குடும்பங்களைச் சேர்ந்த 30 ஆயிரத்து 228 பேர் சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மாவட்ட அரச அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.** ☞2

## மண்ணுக்குள் புதையுண்ட மேலும் இரு குடும்பங்கள்!

### நால்வர் சடலங்களாக மீட்பு; ஒருவர் உயிருக்குப் போராட்டம்



குருநாகல் மற்றும் கேகாலை மாவட்டங்களில் மண்சரிவில் இரு குடும்பங்கள் புதையுண்டன. அவர்களில் நால்வர் இன்று சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர். ஒருவர் உடல் முழுவதிலும் பலத்த காயங்களுடன் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

குருநாகல் - ரிதிகம பகுதியில் வீடொன்றின் மீது நேற்றிரவு மண் சரிந்து விழுந்ததில் வயோதி ☞2

## 11 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாயம்!

இலங்கையில் 11 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டிருந்த மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, பதுளை, கொழும்பு, கம்பஹா, கேகாலை, இரத்தினபுரி, களுத்துறை, மாத்தளை, கண்டி, நுவ ☞2

## வெள்ளத்தில் சிக்கித் தவித்த 288 பேர் மீட்பு!



இலங்கையில் கடந்த இரு நாள்களாக பெய்து வந்த மழை காரணமாக பல்வேறு பகுதிகளில் கடும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இந்த வெள்ள அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களை மீட்கும் பணிகளில் கடற்படையினர் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இதன்படி, கடந்த 48 மணி நேரத்தில் அதாவது நேற்றுமுன்தினம் (8ஆம் திகதி) முதல் இன்று 10ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 288 பேர் கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட பொது மக்கள், பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் எனவும், அவர்களுக்கான உடனடி நிவாரண உதவிகள் வழங்கப்பட்டுள்ளன எனவும் கடற்படையினர் ☞2

## வெள்ளத்தில் சிக்கி நால்வர் உயிரிழப்பு மூவர் மாயம்

நாட்டில் நிலவிவரும் சீரற்ற காலநிலை காரணமாக உடப்பு, வரக்காபொல, முந்தல் மற்றும் குளியாப்பிட்டி ஆகிய பகுதிகளில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தில் சிக்குண்டு 11 வயது சிறுவன் ஒருவர் உட்பட மூவர் காணாமல் போயுள்ளமையுடன் நால்வர் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் இன்று விடுத் ☞2

## வெள்ளத்தில் சிக்கித் தவித்த..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தனர்.

களுத்துறையின் பரகொட, இரத்தினபுரி புதிய நகரம், காலியின் உடமலத்த, பாலவிய வணாத் தவில்லு, எலுவன்குளம், மன்னார் வீதி, கல்பிட்டி, உடுபத்தாவ, தாரவில்லுவ, கொடதெனியாவ, புத்தளம், குருநாகல் ஆகிய இடங்களில் இந்த மீட்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

## கூட்டமைப்பு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சென்று சந்தித்திருந்த இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, முன் கூட்டிய தீபாவளி வாழ்த்துக்களைத் தெரிவித்திருந்தார். இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டிருந்த கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன், கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுவினருடன் சந்திப்பை நடத்தக் கோரிக்கை முன்வைத்திருந்த நிலையில் நேற்று குறித்த சந்திப்பு இடம்பெறும் என முன்கூட்டியே அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், நாடாளுமன்ற அலுவல்கள் காரணமாகவும், வேறு சில காரணங்களைக் கருத்தில்கொண்டும் நேற்று நடைபெற இருந்த சந்திப்பை ஒத்திவைக்குமாறு இந்தியத் தூதுவருக்குச் சம்பந்தன் அறிவித்தார். சம்பந்தனின் கோரிக்கைக்கமைய சந்திப்பை நாளை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

இதன்போது சமகால விடயங்கள் தொடர்பில் பேசப்படும் என்று கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

## வெள்ளத்தில் சிக்கி நால்வர் ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துள்ள செய்தி அறிக்கையில் தெரிவித்துள்ளது.

குருநாகல், பரணகம, வில்பொல பிரதேசத்தில் நபர் ஒருவரும், அவரது 11 வயது மகனும் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ள நிலையில், தந்தையின் சடலம் மீட்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சிறுவனின் சடலத்தைத் தேடும் பணியில் பொலிஸாரும் கடற்படையினரும் இணைந்து ஈடுபட்டு வருகின்றனர்.

இம்முறை தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் குருநாகல் மாவட்டத்தில் முதலிடம் பெற்ற மாணவனே இவ்வாறு நீரில் அடித்துச் செல்லப்பட்டு காணாமல் போயுள்ளார்.

நேற்று மாலை மேலதிக வகுப்புக்காகச் சென்றுவிட்டு தனது தந்தையுடன் வீடு திரும்பும்போதே பரணகம ஓயா பெருக்கெடுத்ததில் இருவரும் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளனர்.

தனது கணவரும் மகனும் வீடு திரும்பவில்லை என்று சடலமாக மீட்கப்பட்டவரின் மனைவி குளியாப்பிட்டிப் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டுக்கு அமைவாக பொலிஸார் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போதே குறித்த நபரின் சடலம் இன்று காலை மீட்கப்பட்டுள்ளது.

புத்தளம், முந்தல் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தாரவில்லுவ, கிரிஉல்லவத்த ஆகிய இரு பிரதேசங்களில் இருவர் நேற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ள நிலையில் ஒருவர் சடலமாக இன்று மீட்கப்பட்டுள்ளதுடன் மற்றைய நபரைத் தேடும் பணி இடம்பெறுகின்றது.

முந்தல் தாரவில்லுவ பிரதேசத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் முந்தல் பிரதேசத்தைச் சேர்ந்த 70 வயது நபர் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளார்.

காணாமல்போனவரைத் தேடும் பணியில் முந்தல் பொலிஸாரும் கடற்படையினரும் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை, முந்தல் - கிரிவுல்லவத்த பிரதேசத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின்போது வீதியில் பயணித்த நபர் ஒருவர் வெள்ளநீர் நிரம்பியிருந்த குழிக்குள் விழுந்து மரணமடைந்துள்ளார். முந்தல் பிரதேசத்தைச் சேர்ந்த 58 வயது நபரே இவ்வாறு மரணமடைந்துள்ளார். அவரின் சடலம் முந்தல் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, புத்தளம், உடப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மங்களஎலிய பிரதேசத்தில் திடீரென ஏற்பட்ட வெள்ளம் காரணமாக மங்களஎலிய களப்பில் இருந்தநபரை அழைத்து வருவதற்காகச் சென்ற நபர் ஒருவர் நீரில் அடித்துச் செல்லப்பட்டுக் காணாமல்போயுள்ளார். கொத்தன்தீவு பிரதேசத்தைச் சேர்ந்த 59 வயது நபரே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

குறித்த நபரை மீட்கும் பணியில் உடப்பு பொலிஸார் மற்றும் கடற்படையினர் இணைந்து ஈடுபட்டுவருகின்றனர்.

கேகாலை, வரக்காபொல பொலிஸ் பிரிவு வெனிவெல்கட்டுவ பிரதேசத்தில் அதிக மழை காரணமாக வெள்ள நீர் நிரம்பியிருந்த பகுதியில் குளிப்பதற்காக நண்பர்களுடன் சென்ற இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கி மரணமடைந்துள்ளார். வெனிவெல்கட்டுவ பிரதேசத்தைச் சேர்ந்த 18 இளைஞரே வெள்ளநீரில் மூழ்கி மரணமடைந்துள்ளார்.

## 30 ஆயிரம் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்போதைய காலநிலை தொடர்பாக யாழ். மாவட்ட செயலகத்தில் இன்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் முதல் 243 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

மிகக் குறுகிய நேரத்தில் அதிகமான மழை வீழ்ச்சி பதிவானதால் பல இடங்களில் வெள்ள அனர்த்தம் ஏற்பட்டுள்ளதோடு, வயல் மற்றும் விவசாய நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

வெள்ள நிலை காரணமாக 86 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் மாத்திரமே இடம்பெயர்ந்துள்ளனர். அவர்கள் 6 தற்காலிக இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

வெள்ளத்தால் ஒரு வீடு முழுமையாகவும், 92 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

காலநிலை சீரடைந்து வருவதால் நாளை வியாழக்கிழமை பாடசாலைகளை ஆரம்பிக்க முடியும் - என்றார்.

## காரைநகர் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாளர் ம.பற்றிக் நிரஞ்சன் தலைமையில் இன்று நடைபெற்றது.

குறித்த அமர்வின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் காரைநகர் பிரதேச சபை உப தவிசாளர் பாலச்சந்திரன் போட்டியிட இருந்த போதிலும் அவருக்கு ஏனைய கட்சிகள் ஆதரவு அளிக்காத நிலையில் சுயேச்சைக் குழுவைச் சேர்ந்த அப்புத்துரை தவிசாளர் பதவிக்குப் போட்டியிட்டு ஈ.பி.டி.பியின் ஆதரவுடன் வெற்றியீட்டியுள்ளார்.

இன்றைய தவிசாளர் தெரிவுக்கான விசேட அமர்வை ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் புறக்கணித்ததோடு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் நடுநிலை வகித்துள்ளனர்.

காரைநகர் பிரதேச சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் மூன்று உறுப்பினர்களும், சுயேச்சைக் குழுவில் மூன்று உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக்கட்சியில் இரண்டு உறுப்பினர்களும், ஈ.பி.டி.பியில் இருவரும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியில் ஒருவரும் உள்ள நிலையில் ஈ.பி.டி.பியின் ஆதரவுடன் சுயேச்சைக் குழுவானது தவிசாளர் பதவியைக் கைப்பற்றியுள்ளது.

## 11 மாவட்டங்களுக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரெலியா, குருநாகல் மற்றும் காலி மாவட்டங்களுக்கு உட்பட்ட பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு இந்த மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மண்சரிவு அபாய எச்சரிக்கை நிலவும் பகுதிகளில் வசிக்கும் மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு இடம் பெயருமாறு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவுறுத்தியுள்ளது.

## மாமனிதர் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைந்துள்ள நினைவு சதுக்கத்தில் நகர சபை உறுப்பினர் ஞா.கிஷோர் தலைமையில் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா, ரவிராஜ்ஜின் குடும்பத்தினர் கலந்துகொண்டு உருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து சுடரேற்றி அஞ்சலி நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.

இதில்தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் ஆதரவாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

## மண்ணுக்குள் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பத் தம்பதியர் உயிரிழந்தனர்.

75 வயதான கணவர் மற்றும் 65 வயதான அவரது மனைவி ஆகியோரே உயிரிழந்தவர்களாவர்.

இருவரதும் சடலங்களும் இன்று காலை மீட்கப்பட்டு வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, கேகாலை - ரஸ்னகொட பகுதியில் நேற்றிரவு ஏற்பட்ட மண்சரிவில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் சிக்கிக்கொண்ட நிலையில் தந்தையும் (வயது 70), மகனும் (வயது 32) இன்று சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

தாய் (வயது 65) உடல் முழுவதிலும் பலத்த காயங்களுடன் மீட்கப்பட்டு வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

## மூன்று ஆயர்களுடன் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கான சுவிஸ் தூதுவர் டொமினிக் பார்க்லர் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இன்று நண்பகல் ஹெலி மூலம் யாழ்ப்பாணம் வந்த சுவிஸ் தூதுவர் தலைமையிலான குழுவினர் யாழ்ப்பாணம் ஆயர் இல்லத்தில் வடக்கு, கிழக்கு ஆயர்களைச் சந்தித்தார்.

இதன்போது சமகால நிலைமைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

இந்தச் சந்திப்பில் யாழ். ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை, மன்னார் ஆயர் இம்மனுவேல் பெர்னாண்டோ, திருகோணமலை ஆயர் நோயல் இம்மனுவேல் ஆண்டகை ஆகியோர் கலந்துகொண்டனர்.





# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

0

## நீதியரசர் உரைக்கும் நீதி

“அமெரிக்காவுடன் பேசுவதற்கு தமிழரசுக் கட்சி பிரமுகர்கள் செல்வதில் எந்தத் தவறும் இல்லை. இதில் எனக்கு எந்தவிதமான காழ்ப்புணர்ச்சியோ அல்லது பொறாமையோ இல்லை. எந்தப் பின்னணியில் எவர் பேச்சுக்குச் சென்றாலும் எமது மக்களின் அரசியல் தீர்வு தொடர்பிலான நிலைப்பாடுகளை அவர்கள் செல்லும் இடங்களில் தெளிவாக வலியுறுத்தும் வரையில் எனது ஆதரவு அவர்களுக்கு இருக்கும். அவர்கள் அவ் வாறு வலியுறுத்துவதால் முரண்பாடுகள் எதுவும் ஏற்படப் போவதில்லை.”

–இவ்வாறு அறிக்கை ஒன்றில் கூறியிருக்கின்றார் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவருமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்.

அந்த அறிக்கையில் தாம் குறிப்பிட்டமையைப் போல அரசியல் பொறாமையோ காழ்ப்புணர்ச்சியோ காட்டாமல், அதையும் தாண்டி உண்மையை – யதார்த்தத்தை – பிரதிபலித்திருக்கிறார் அவர்.

தமிழ் மக்களின் அபிலாஷைகள், அதில் இந்தியப் பங்களிப்பு எப்படி இருக்க வேண்டும் என்பவற்றையெல்லாம் அவர் கோடி காட்டி இருக்கிறார்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் மூலம் கொண்டுவரப்பட்ட அதிகாரப் பகிர்வு ஏற்பாடுகள் இன்னும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. ஆனால் 13 ஆவது திருத்தம் சட்டமாக்கப்பட்ட போதே அது தமது அபிலாஷைகளை நிறைவு செய்யவில்லை, அது தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளை பூர்த்தி செய்யவில்லை என்பதைத் தமிழர் தரப்பு இந்தியாவுக்கு வெளிப்படையாக தெளிவுபடுத்தி விட்டது என்ற உண்மையை விக்னேஸ்வரன் சுட்டிக் காட்டுகின்றார். இந்தப் பின்புலத்தில் இப்போது 13 ஆவது திருத்தத்தையாவது நடைமுறைப்படுத்த நடவழக்கை எடுக்கப்பட வேண்டுமென இந்தியாவைப் பார்த்து தமிழர்கள் கூறுவது அவர்களின் இறுதி எதிர்பார்ப்பு அல்ல, இனப் பிரச்சினைக்கு தமிழர்கள் எதிர்பார்க்கும் இறுதித் தீர்வும் அது அல்ல என மிக விவரமாக தெளிவுபடுத்துகின்றார் விக்னேஸ்வரன். அதுதான் உண்மை நிலைமை.

தமிழினம் தனது தாயகத்தில் எதிர்கொண்டிருக்கும் ஆபத்தான கட்டத்தை விவரிக்கின்றார் விக்னேஸ்வரன். அந்த ஆபத்தின் இறுக்கத்தைத் தளர்த்துவதற்கு 13 ஆவது திருத்தத்தை முழு அளவில் நிறைவேற்றித் தரும் தனது கடப்பாட்டை இந்தியா பூர்த்தி செய்யவேண்டும் என்று அவர் வலியுறுத்துவது ஒட்டுமொத்த தமிழினத்தின் நிலைப்பாட்டை பிரதிபலிக்கும் அம்சம்தான். அதற்கப்பால் ஒற்றையாட்சியைக் கடந்த – அதிக அதிகாரப்பகிர்வை உள்ளடக்கிய – ஒரு சமஷ்டி ஏற்பாடுதான் நிரந்தரத் தீர்வாக இருக்க வேண்டும், இருக்க முடியும் என்ற அவரது வலியுறுத்தலும், கொள்கை ரீதியில் – கருத்தியல் மட்டத்தில் – மிகப் பொருத்தமான நிலைப்பாடும், வலியுறுத்தலுமாகும்.

இதனை மனதில் நிறுத்தி தமிழர் தரப்பு செயற்பட வேண்டும் என்ற அவரது வழிகாட்டல் மிகவும் பொருத்தமானது, சரியானது. அவர் குறிப்பிடுவது போல அமெரிக்கா செல்லும் தமிழர் தரப்பு இந்த நிலைப்பாடுகளை மனதில் நிறுத்தி தமது தந்திரோபாயங்களை வகுத்துச் செயல்பட வேண்டும். தமிழ்க் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் குழுவாகவே அமெரிக்க தரப்புடன் பேசப் போகின்றோம் என மூவர் குழுவின் சார்பில் சுமந்திரன் குறிப்பிட, அந்தக் குழுவை அங்கீகரிக்கின்றோம் என கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளே இன்னும் கருத்து வெளியிடவில்லை, ஆனால் அதற்கு முன்னர் நீதியரசர் விக்னேஸ்வரன் முந்திக்கொண்டு அப்படி அவர்கள் செல்வதில் எனக்கு காழ்ப்புணர்ச்சி ஏதுமில்லை, சர்வதேச மத்தியஸ்தம் இல்லாமல் எமது பிரச்சினைக்கு நிலையான தீர்வு காண முடியாது, அந்த அடிப்படையில் இந்தக் குழு அமெரிக்கா செல்வதில் எந்தத் தவறும் இல்லை என்று குறிப்பிட்டு, தமது அரசியல் சிந்தனை முதிர்வை மீண்டும் ஒரு தடவை நிரூபித்திருக்கிறார்.

# மன்னாரில் தொடர் மழை 98 குடும்பங்கள் பாதிப்பு

## மாவட்ட அரச அதிபர் தகவல்



மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பெய்து வரும் மழை காரணமாக 98 குடும்பங்களைச் சேர்ந்த 361 நபர்கள் பாதிக்கப்பட்டு நான்கு இடைத்தங்கல் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.ஸ்ரான்லி டிமெல் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்ட செயலகத்தில் நேற்று (செவ்வாய்க்கிழமை) மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் அவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பெய்து வரும் மழை காரணமாக மாவட்டத்தின் பல கிராமங்கள் வெள்ள நீரில் மூழ்கியுள்ளன. புழுதி வேளாண்மையில் ஈடுபட்டிருந்த பல வயல் நிலங்கள் மழை வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் 2,580 ஏக்கர், முசலி பிரதேச செயலாளர் பிரிவில் 990 ஏக்கர் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் 180 ஏக்கர் மற்றும் மன்னார் நகரப் பிரதேச செயலாளர் பிரிவில் 560 ஏக்கர் புழுதி வேளாண்மையும் பாதிக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் மொத்தமாக 5,700 ஏக்கர் வயல் நிலங்கள் முற்றாக நீரில் மூழ்கியுள்ளன. வெள்ள அனர்த்தம் காரணமாக மன்னார் கல்வி வலயத்துக்குட்பட்ட 13 பாடசாலைகளும், மடு வலயத்தில் உள்ள 2 பாடசாலைகளும் மொத்தமாக 15 பாடசாலைகள் மன்னார் மாவட்டத்தில் மூடப்பட்டுள்ளன.

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த மக்களை 4 பாடசாலைகளைத் தற்காலிக இடைத்தங்கல் முகாம்களாக மாற்றி மக்களைத் தங்கவைத்துள்ளோம்.

எழுத்தூர் பகுதியில் 41 குடும்பத்தைச் சேர்ந்த 162 நபர்களும், சௌத்பார் கிராமத்தில் 3 குடும்பத்தைச் சேர்ந்த 12 நபர்களும், விடத்தல் தீவு கிழக்குப் பகுதியில் 4 குடும்பங்களைச் சேர்ந்த 16 நபர்களும், தலைமன்னார் பியர் பகுதியில் 33 குடும்பங்களைச் சேர்ந்த 101 நபர்களும், தலைமன்னார் கிராமத்தில் 7 குடும்பங்களைச் சேர்ந்த 25 நபர்களும், செல்வ நகர் கிராமத்தில் 10 குடும்பங்களைச் சேர்ந்த 45 நபர்களுமாக 98 குடும்பங்களைச் சேர்ந்த 361 நபர்கள் தற்போது வரை இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களைச் சுகாதார திணைக்களத்தின் உதவியுடன், சுகாதார நடைமுறைகளுக்கு ஏற்ப பிரதேச செயலகங்கள் ஊடாக பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

மாவட்டத்தின் பல கிராமங்கள் இவ்வாறு வெள்ள நிலைமையை எதிர்நோக்கியுள்ள போதிலும், அவர்கள் இடம்பெயர்ந்து முகாம்களுக்குச் செல்லாது உறவினர்கள் மற்றும் நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ளனர்.

கிராமங்களுக்குள் சென்றுள்ள வெள்ள நீரை வெளியேற்ற நகர சபை, பிரதேச சபை, பிரதேச செயலகங்கள், மாவட்ட செயலகம், நீர்ப்பாசனத் திணைக்களம் உள்ளிட்ட திணைக்களங்களுடன் இணைந்து நீரை வெளியேற்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. எனினும் மழை தொடர்ச்சியாகப் பெய்து வரும் பட்சத்தில் குறித்த நடவடிக்கை எமக்கு சவாலாக உள்ளது.

தொடர்ச்சியாக மழை பெய்வதற்கான எதிர்வு கூறல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளமையால் மக்கள் அவதானத்துடன் இருப்பதுடன், இரவு வேளைகளில் அதி கூடிய மழை பெய்யும் பட்சத்தில் கிராம அலுவலகர்களுடன் தொடர்புகொண்டு அருகில் உள்ள இடைத் தங்கல் முகாம்களில் சென்று பாதுகாப்பைப் பெற்றுக்கொள்ள முடியும். கிராம அலுவலகர் ஊடாக பிரதேச செயலகம் மற்றும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்துடனும் தொடர்புகொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# எனது நாடாளுமன்ற ஆசனத்தை ரஞ்சனுக்கு தியாகம் செய்யத் தயார்

## ஹரின் திட்டவட்டம்



தனது நாடாளுமன்ற ஆசனத்தை ரஞ்சன் ராமநாயக்கவிற்காக தியாகம் செய்யத் தயார் என நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ மீண்டும் தெரிவித்துள்ளார்.

ரஞ்சன் ராமநாயக்க விடுதலை செய்யப்பட்டால் தனது தேசியப் பட்டியல் ஆசனத்தை ரஞ்சனுக்கு வழங்கத் தயார் என அவர் நாடாளுமன்றில் குறிப்பிட்டுள்ளார்.

அடுத்த தேர்தலில் போட்டியிட்டு மக்களின் வாக்குகளால் மீளவும் நாடாளுமன்றம் பிரவேசிக்க முடியும் என்ற நம்பிக்கை தமக்கு உண்டு என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நீதிமன்றை அவமரியாதை செய்த குற்றத்துக்காக ரஞ்சனுக்கு கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சீனாவின் அறிவாற்றல் போருக்கு எதிராக தாய்வான் நடவடிக்கை!

சீன அறிவாற்றல் போரை எதிர்ப்பதற்கும், சமூக ஊடகங்கள் மற்றும் பிற தளங்களைப் பயன்படுத்த தவறான தகவல் களை பரப்பி சமூக அமைதியின்மையை ஏற்படுத்துவதை தடுப்பதற்கும் தாய்வான் நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

தாய்வானுக்கு, எதிரான சீன கம்யூனிஸ்ட் கட்சியின் அறிவாற்றல் போர் முயற்சிகளை எதிர்த்துப் போராடுவதாக இவ்விதமாக நடவடிக்கையை எடுத்துள்ளதாக அதன் தேசிய பாதுகாப்பு அமைச்சு கூறியதாக தைபே டைம்ஸ் தெரிவித்துள்ளது. வெளிநாட்டு சக்திகளின் அறிவாற்றல் போர் முயற்சிகளை வரையறுப்பதற்கும் அதை எதிர்த்துப் போராடுவதற்கான இராணுவத்தின் நடவடிக்கைகளை கோடிட்டுக் காட்டுவதற்கும் சட்டமியற்றுவதற்கான வழிகாட்டுதல்களைசமர்ப்பித்துள்ளதாக அமைச்சு கூறியதாகவும் மேலும்தெரிவிக்கப்பட்டது.

சீன கம்யூனிஸ்ட் கட்சி போலி சமூக ஊடகக் கணக்குகள் தாய்வானின் சில ஒத்துழைப்பாளர்களின் மூலம் முன்னெடுக்கும் பிரசாரத்தின் ஊடாக தாய்வானுடன் அறிவாற்றல் போரில் ஈடுபட்டுள்ளது என 'தைபே டைம்ஸ்' தெரிவித்துள்ளது. தாய்வானில் சமூக ஊடகங்கள் மூலம் பகிரப்பட்ட தவறான தகவல்களை இராணுவம் கண்டறிந்து, அதன் சொந்த சமூக ஊடகக் கணக்குகள் மற்றும் வலைத்தளங்களில் திருத்தப்பட்ட தகவல்களை இடுகையிடுகிறது, மேலும் முடிந்தவரை பொது இடுகைகளுக்கான பதில்களில் திருத்தப் பட்ட தகவல்களை இடுகையிடுவதாக அமைச்சு கூறியுள்ளது.

இதற்கிடையில், சீனப் படையெடுப்பு முயற்சியின் அச்சுறுத்தலைச் சந்திக்க இராணுவம் அதன் சமச்சீரற்ற போர் மற்றும் மின்னணு போர்த்திறன்களை மேம்படுத்துவதைத் தொடர வேண்டும் என ஒரு பாதுகாப்பு ஆராய்ச்சியாளர் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது

# 400 இற்கும் மேற்பட்ட குழந்தைகள் ஆப்கானில் இந்த ஆண்டில் சாவு

**யுனிசெவ் அறிவிப்பு**




ஆப்கானிஸ்தானில் இந்த ஆண்டின் முதல் 6 மாதங்களில் மாத்திரம் 460 குழந்தைகள் வன்முறையால் உயிரிழந்துள்ளனர் என ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் நிதியம் தெரிவித்துள்ளது.

இது குறித்த நிதியம் வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த வியாழக்கிழமை காலையில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பெண் குழந்தைகள், இரண்டு ஆண் குழந்தைகள் உள்ளிட்ட ஒன்பது பேர் கொல்லப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் பல ஆண்டுகள் நீடித்த உள்நாட்டுப்போர் குறித்துதெரிவித்துள்ள யுனிசெப், ஆப்கானிஸ்தானில் போர் காரணமாக ஆயிரக்கணக்கான மக்களின் வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும் வறுமை, உணவுப் பஞ்சம், ஊட்டச்சத்து குறைப்பாடு போன்ற பிரச்சினைகளாலும் குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளனர் என யுனிசெவ் கவலை வெளியிட்டுள்ளது.

# ஈராக் பிரதமர் மீதான தாக்குதல்; ஈரானுக்கு தொடர்பு இல்லை!



ஈராக் பிரதமர் மீதான ஆளில்லா விமானத் தாக்குதலுக்கும் ஈரானுக்கு எந்தத் தொடர்பும் இல்லை என ஈரானின் இராணுவ ஜெனரல் இஸ்மாயில் கானி தெரிவித்துள்ளார்.

தாக்குதல் நடந்ததை யடுத்து நேற்று (திங்கட்கிழமை) ஈராக் வந்த ஈரானின் இராணுவ ஜெனரல் இஸ்மாயில் கானி, ஈராக்கின் உயர் அதிகாரிகளை சந்தித்தார்.

இதன்போது, பிரதமர் மீதான கொலை முயற்சியில் ஈரானுக்கு எந்தத் தொடர்பும் இல்லை எனத் தெரிவித்தார். ஈராக்கின் அடுத்த பிரதமராக ஷியா ஆயுதக் குழுவினர் பரிந்துரைக்கும் எந்த அரசியல்வாதிக்கும் ஈரான் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை என அவர் கூறினார்.

மேலும், பிரதமர் அல் காதிமி, ஜனாதிபதி பர்ஹம் சாலிஹ் ஆகியோரையும் அவர் சந்தித்து கலந்துரையாடினார். முன்னதாக, ஈராக் பிரதமர் மீதான தாக்குதலுக்கு ஈரான் வெளியுறவு அமைச்சகம் கண்டனம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

தலைநகர் பாக்தாத்தில் உயர் பாதுகாப்பு நிறைந்த பசுமை மண்டல பகுதியில் உள்ள ஈராக் பிரதமர் முஸ்தபா அல் காதிமியின் வீட்டின் மீது ஆளில்லா விமானத் தாக்குதல் நடத்தப்பட்டது.

ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட இந்த தாக்குதலில், ஈராக் பிரதமர் முஸ்தபா அல்காதிமி, காயமின்றி உயிர் தப்பினார். எனினும் பாதுகாப்பு அதிகாரிகள் ஏழு பேர் காயமடைந்தனர்.

# பெற்றோலியம் மீதான வரியை அதிகரிக்குமாறு பாகிஸ்தானிடம் நாணய நிதியம் கோரிக்கை

பாகிஸ்தானில், எதிர்க்கட்சிகளின் தொடர் போராட்டங்களுக்கு மத்தியில் பெற்றோல் விலை உயர்த்தப்பட் டுள்ளதை அடுத்து, அந்நாட்டு அரசாங் கம் எதிர்காலத்தில் பெற்றோலியப் பொருள்களின் மீதான வரியை அதிகரிக்க வாய்ப்புள்ளதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



'சர்வதேச நாணய நிதியம் பாகிஸ்தானின் பெற்றோலிய மேம்பாட்டு வரியை அதிகரிக்குமாறு கோரியுள்ளதோடு, பெற்றோலியப் பொருள்களின் உலகளாவிய விலையைப் பொறுத்தே அது அமையும்' என பாகிஸ்தானின் நிதி ஆலோசகர் ஷௌகத் தரின் கூறினார் என நியூஸ் இன்டர்நேஷனல் தகவல் வெளியிட்டுள்ளது. எண்ணெய் பொருள்கள் மீதான சாத்தியமான வரி அதிகரிப்புப் பற்றி அவர் சுட்டிக்காட்டியுள்ளதோடு, உலகளாவிய ரீதியில் எண்ணெய் விலை குறைந்தால், 'அரசாங்கம்' அதிகரிப்பது வரியை அதிகரிப்பது எளிது எனவும் அவர் கூறினார். பெற்றோலியப் பொருட்களின் விலைகள் சமீபகாலமாக உயர்ந்து வருவதைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டாலும் இந்த பொருட் களின் விலைகள் சர்வதேச சந்தையுடன் நேரடியாக தொடர்புபட்டிருப்பதால் இந்த விலை உயர்வு ஏற்பட்டதாகவும் அவர் மேலும் கூறினார்.

எனினும், சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சில் முட்டுக்கட்டைகள் உள்ளதை நிராகரித்த அவர் ஸ்டேட் பாங்க் ஒப் பாகிஸ்தானின் தன்னாட்சி அதிகாரம் குறித்து சில நெருக்கடிகளைத் தருவதாகவும் வரும் நாட்களில் அந்நெருக்கடிகள் பேச்சு ஊடாக தீர்க்கப்படும் என்று நம்புகிறேன் எனவும் தெரிவித்தார்.

# தாய்வான் வான்பரப்பில் 20 சீன விமானங்கள் பிரவேசிப்பு



கடந்த 24 மணி நேரத்தில் தாய்வானின் வான் பாதுகாப்பு வலயத்திற்குள் 20 சீன போர் விமானங்கள் ஊடுருவின என அதன் தேசிய பாதுகாப்பு அமைச்சு கூறியுள்ளது. தாய்வானின் வான் பாதுகாப்பு வலயத்திற்குள் 10 ஷென்யாங் ஜே-16 மற்றும் ஆறு செங்ட் ஜே-10 போர் விமானங்கள் அத்துமீறி நுழைந்தன எனத் தேசிய பாதுகாப்பு அமைச்சு கூறியுள்ளது.

16 போர் விமானங்கள் தாய்வானின் வான் பாதுகாப்பு வலயத்தின் தென் மேற்கு மூலையில், டோங்ஷா தீவுகளுக்கு (பிரதாஸ் தீவுகள்) வடகிழக்கே ஊடுருவிச் சென்றன என குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னதாக நான்கு ஜே-16 போர் விமானங்கள் தாய்வானின் வான் பாதுகாப்பு வலயத்திற்குள் பிரவேசித்திருந்தன.

அத்துடன் தென்மேற்கு திசையில் மீண்டும் டோங்கா தீவுகளுக்கு அருகிலேயே அந்தப் பிரவேசமும் அமைந்திருந்தன.

தாய்வானின் விமானப்படை மேற்படி அத்துமீறல் நிகழ்வுகளின்போது, போர் விமான ரோந்து, வானொலி எச்சரிக்கைகளை ஒளிபரப்புதல் மற்றும் நில அடிப்படையிலான விமான எதிர்ப்பு ஏவுகணைகள் மூலம் அவற்றைக் கண்காணித்தல் ஆகிய பதில் நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தது. கடந்த மாதம் ஒக்ரோபர் முதலாம் திகதி சீனாவின் தேசிய தினத்தன்று, தாய்வானின் வான் பரப்பிற்குள் 38 சீன இராணுவ விமானங்கள் அத்துமீறியிருந்ததோடு, அதற்கு அடுத்த தினமும் 39 விமானங்கள் அத்துமீறியிருந்தன.

ஏழு தசாப்தங்களுக்கும் மேலாக தாய்வான் தனியாக ஆளப்பட்டு வந்த போதிலும், அதன் இறையாண்மையைக் பெய்ஜிங் கோருகின்றது. பீஜிங்கால் பலமுறை எதிர்க்கப்பட்ட அமெரிக்கா உள்ளிட்ட ஜனநாயக நாடுகளுடன் மூலோபாய உறவுகளை அதிகரிப்பதன் மூலம் சீன ஆக்கிரமிப்பை தாய்வான் எதிர்கொண்டு வருகிறது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# மகாராஷ்டிரா மருத்துவமனை விபத்துக்களில் இந்தாண்டில் மட்டும் 75 பேர் பரிதாப உயிரிழப்பு



மகாராஷ்டிரா மாநிலத்தில் கடந்த 10 மாதங்களில் மருத்துவமனைகளில் ஏற்பட்ட தீ விபத்தில் 75 க்கும் அதிகமானோர் உயிரிழந்தனர் எனத் தரவுகள் தெரிவிக்கின்றன.

இந்தியாவின் தொழில் தலைநகரமான மும்பை அமைந்துள்ள மகாராஷ்டிரா மாநிலத்தில் மருத்துவமனைகளில் தீ விபத்து ஏற்படுவதும் அதனால் உயிரிழப்புகள் ஏற்படுவதும் வாடிக்கையான ஒன்றாக மாறிவிட்டது.

இந்த ஆண்டு ஜனவரி 9 ஆம் திகதி மகாராஷ்டிராவில் உள்ள பாந்திரா மாவட்ட அரசு மருத்துவமனையில் ஏற்பட்ட தீவிபத்தில் பச்சிளம் குழந்தைகள் 10 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். மார்ச் 25ஆம் திகதி மும்பையில் கொரோனா தனிமைப்படுத்துதல் முகாம் ஒன்றில் பரவிய தீயில் 11 நோயாளிகள் உயிரிழந்திருந்தனர்.

இந்தச் சம்பவம் நடந்து ஒரு மாதம் கூட நிறைவடையாத சூழலில் ஏப்ரல் 21 ஆம் திகதி நாசிக்கில் டாக்டர் சாகிர் உசேன் மருத்துவமனையில் ஒட்சிசன் உற்பத்தி இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக 24 கொரோனா நோயாளிகள் உயிரிழந்தனர்.

அதற்கு இரண்டே தினங்கள் கழித்து, ஏப்ரல் 23 ஆம் திகதி விஜய் வல்லம் என்ற மருத்துவமனையில் ஐ.சி.யு. பிரிவில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் 15 கொரோனாத் தொற்றாளர்கள் உயிரிழந்தனர். அதே மாதம் 28 ஆம் திகதி மும்பரா என்ற இடத்தில் உள்ள தனியார் மருத்துவமனையில் ஏற்பட்ட தீ விபத்தில் நான்கு பேர் உயிரிழந்திருந்தனர். அதன் பிறகு சில மாதங்கள் தீ விபத்துக்கள் எதுவும் ஏற்படாமல் இருந்த நிலையில் கடந்த நவம்பர் 6 ஆம் திகதி அகமதுநகர் மாவட்ட அரசு மருத்துவமனையில் ஏற்பட்ட தீ விபத்தில் 11 பேர் பரிதாபமாக தீயில் கருகி உயிரிழந்தனர்.

ஒவ்வொரு முறை தீ விபத்து ஏற்படும்பொழுதும் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு 5 லட்சம் ரூபா இழப்பீடு வழங்குவதும் சில அதிகாரிகள் பணியிடை மாற்றம் செய்யப்படுவதும் சம்பிரதாயமாக நடைபெற்று வந்தாலும் தீ விபத்துகளால் ஏற்படும் உயிரிழப்புகள் என்பது மகாராஷ்டிராவில தொடர் கதையாகவே இருந்து வருகிறது. இது தொடர்பாக விரிவாக ஆராய்ந்து உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென பல தரப்பினரும் வலியுறுத்தி வருகின்றனர்.

# ஆந்திராவில் கல்லூரி மாணவர்கள் போராட்டத்தில் பொலிஸார் தடியடி

ஆந்திராவில் அரசு நிதி உதவி பெறும் பாடசாலைகளையும் கல்லூரிகளையும் தனியார் பாடசாலைகள் மற்றும் கல்லூரிகளுடன் இணைப்பதைக் கண்டித்து போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மீது பொலிஸார் தடியடி நடத்தியதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

பாடசாலைகள், கல்லூரிகள் ஆகியவற்றிற்கு வழங்கப்படும் நிதி உதவியை நிறுத்த இருப்பதாகவும், அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களை அந்தந்த நிர்வாகங்கள் சுயமாக நடத்திக்கொள்ள வேண்டும் எனவும் ஆந்திர அரசு அரசாணை பிறப்பித்தது.

இதனடிப்படையில், ஆந்திர மாநிலம் அனந்தபூரில் அரசு நிதி உதவியுடன் செயல்பட்டு வரும் எஸ்.எஸ்.பி.என். என்ற கல்லூரி தனியார் கல்லூரி ஒன்று உடன் இணைக்கப்பட இருப்பதாக கூறப்படுகிறது. இதனால், அந்த கல்லூரியில் பயிலும் மாணவர்களின் கல்விக் கட்டணம் பல மடங்கு உயரக்கூடும் என்ற அச்சம் மாணவர்களிடையே பரவலாக ஏற்பட்டுள்ளது. எனவே மாணவர் சங்கத்தினர் அரசு முடிவைக் கண்டித்து கல்லூரிக்கு எதிரில் உள்ள சாலையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களை கலைப்பதற்காக பொலிஸார் அவர்கள் மீது தடியடி நடத்தினர். தடியடிச் சம்பவத்தில் மாணவர் ஒருவரின் மண்டை உடைந்தது. போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர் சங்கத் தலைவர்களை கைது செய்யவும் பொலிஸார் முயன்றனர். அப்போது பொலிஸாருக்கும் மாணவர்களுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டு தள்ளுமுள்ளு ஏற்பட்டது. இதன்போது நடைபெற்ற இழுபறியிலும் சில மாணவர்கள் காயமுற்றனர்.

அனந்தபூரில் மாணவர்கள் மீது பொலிஸார் தடியடி நடத்தியதற்கு தெலுங்கு தேசம் கட்சியின் தேசிய பொதுச் செயலாளர் நாராலோகேஷ் கண்டனம் தெரிவித்துள்ளார். இதனால், இந்த விவகாரம் அரசியல் ரீதியாகவும் முக்கியத்துவம் பெற்றுள்ளது.



# இந்திய நாடாளுமன்ற குளிர்கால தொடர் வரும் 29 ஆம் திகதி ஆரம்பிக்கத் திட்டம்

இந்திய நாடாளுமன்ற குளிர்காலக் கூட்டத்தொடரை 29 ஆம் திகதி முதல் நடத்த ஒழுங்கமைப்புக் குழு சிபார்சு செய்துள்ளது.

கொரோனாப் பரவல் காரணமாக, கடந்த ஆண்டு இந்திய நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் நடத்தப்படவில்லை. இந்த ஆண்டு பட்ஜெட் கூட்டத்தொடரும், மழைக்காலக் கூட்டத்தொடரும் திட்டமிட்ட நாளுக்கு முன்பே முடித்துக்கொள்ளப்பட்டன.


இந்தநிலையில், இந்த ஆண்டு குளிர்கால கூட்டத்தொடர் குறித்து முடிவு எடுப்பதற்காக, பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத்சிங் தலைமையில் நாடாளுமன்ற விவகாரங்களுக்கான ஒழுங்கமைப்புக் குழுக் கூட்டம் நடைபெற்றது. அதில், குளிர்கால கூட்டத்தொடரை இம்மாதம் 29 முதல் அடுத்த மாதம் 23 ஆம் திகதி வரை நடத்த பரிந்துரை செய்யப்பட்டது.

கடந்த ஒன்றரை ஆண்டு காலத்தில் நடந்த கூட்டத்தொடர்களைப் போலவே, கொரோனா கட்டுப்பாடுகளை பின்பற்றி குளிர்கால கூட்டத்தொடர் நடத்தப்படும் என்றும், மக்களவை, மாநிலங்களவை இரண்டும் ஒரே நேரத்தில் நடக்கும் என்றும் எம்.பிக்கள், சமூக இடைவெளியை பின்பற்றி கூட்டத்தில் பங்கேற்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் இருக்கும்போது, எம்.பிக்கள் உள்பட அனைவரும் முகக்கவசம் அணிந்திருக்க வேண்டும் என்றும், கூட்டத்தொடர் தொடங்குவதற்கு முன்பு, கொரோனா பரிசோதனை செய்திருக்க வேண்டும் எனவும், இந்த கூட்டத்தொடர் 20 அமர்வுகளாக நடைபெறும் என்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

சமீபத்தில் நடந்த 3 மக்களவைத் தொகுதிகள், 29 சட்டசபைத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தலில் பா.ஜனதா பின்னடைவைச் சந்தித்த நிலையில், குளிர்காலக் கூட்டத்தொடர் நடக்கவிருக்கிறது. இதில், முக்கியப் பிரச்சினைகளை எழுப்பி, மத்திய அரசுக்கு நெருக்கடி கொடுக்க எதிர்க்கட்சிகள் தயாராகிவருகின்றன. பெற்றோல், டீசல், எரிவாயு விலை உயர்வு, சமையல் எண்ணெய் விலை உயர்வு, காஷ்மீரில் அப்பாவிகள் மீதான பயங்கரவாதிகள் தாக்குதல், லகிம்பூரில் விவசாயிகள் கார் ஏற்றிக் கொல்லப்பட்ட சம்பவம், விவசாயிகள் போராட்டம் உள்ளிட்ட பல பிரச்சினைகள் எழுப்பப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

‘பெகாசஸ்’ உளவுப் பிரச்சினையை விவாதிக்கக் கோரி எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டதால், இந்த ஆண்டின் மழைக்காலக் கூட்டத்தொடர் முடங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பும் காலம் நெருங்கி வருகின்றது என்கிறார் ஹக்கீம்



இந்த ஆட்சியாளர்கள் அப்பாவி விவசாயிகள் பதுக்கி வைத்த நெல்லைத் தான் பறித்துப் போவதற்கு வந்தார்கள். சிறிய அரிசி ஆலை சொந்தக்காரர்களுக்குத்தான் பெரிய சோதனையாக இருந்தது. ஆனால், பெரிய அரிசி ஆலை சொந்தக்காரர்களுக்கு எந்தப் பிரச்சினையுமில்லை. அவர்கள் நினைத்த மாதிரித்தான் அரிசியின் விலையை தீர்மானிக்கின்றார்கள்.

இன்று சந்தையில் கீரிசம்பாவின் விலை 225 ரூபாவுக்கு அதிகரித்துள்ளது. பசளைப் பிரச்சினையால் அடுத்த போகத்திற்கு விளைச்சலும் குறைந்துவிடும் நிலை ஏற்பட்டுள்ளது. எதிர்காலத்தில் நாட்டில் பஞ்சம் வந்துவிடுமா என்றதொரு பிரச்சினையும் வரலாம்.

எவ்வாறு இருப்பினும் எங்களின் பார்வையில் அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பும் காலம் நெருங்கி வருகின்றது என்றுதான் தெரிகின்றது. இவ்வாறு முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார். முஸ்லிம் காங்கிரஸின் சம்மாந்துறை இளைஞர் அணி உறுப்பினர்களில் 2020ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையில் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டவர்களை பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு 7 ஆம் திகதி சம்மாந்துறையில் நடைபெற்றது.

இந்த வைபவத்தில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார். அரசாங்கம் என்னதான் பொருளாதாரக் கொள்கைகளை கடைப்பிடித்தாலும், அரசாங்கத்தின் அண்மைக்கால செயற்பாடுகள் பொருள்களின் விலைவாசி உயர்வை எந்த விதத்திலும் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு பொருளாதாரக் கொள்கை இருப்பதை நாங்கள் பார்க்கிறோம்.

இன்று எல்லா இடங்களிலும் ஆர்ப்பாட்டங்களைப் பார்க்கின்றோம். விவசாயிகள் ஆர்ப்பாட்டம் செய்கின்றார்கள். மறுபக்கத்தில் ஆசிரியர்களின் ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது, சேதனப் பசளை விவகாரம் வேறொரு பிரச்சினையாக இருக்கின்றது. இப்படி ஆட்சியாளர்கள் ஆயிரம் பிரச்சினைகளுக்கு மத்தியில் தடுமாறிக் கொண்டிருக்கின்ற காலமாக இருக்கின்றது. ஆட்சியாளர்கள் எல்லாவற்றிக்கும் கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிப்பதற்கு வர்த்தமானி அறிவிப்பை போட்டுக் கொண்டிருந்தார்கள். இப்போது அதெல்லாம் விட்டுவிட்டார்கள்.

வர்த்தமானி அறிவித்தல் போட்டும் விலைகளை கட்டுப்படுத்த முடியவில்லை. அவர்களின் கட்டுப்பாட்டு விலைக்கு சாமான்களை விற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அதனாலே வர்த்தமானி அறிவித்தலில் எந்தப் பிரயோசனமும் இல்லை என்று அரசாங்கம் உணர்ந்துள்ளது. வர்த்தமானி அறிவிப்புக்களை எல்லாம் அரசாங்கம் வாபஸ் வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எரிபொருளின் விலையை பற்றி பேசி பிரயோசனமில்லை. அது பல மடங்கு ஏறியுள்ளது. அடுத்த 12ஆம் திகதி நாடாளுமன்றத்தில் வரவு–செலவு திட்டத்தை நிறைவேற்ற இருக்கின்றார்கள். வரவு – செலவு திட்டத்திலே என்ன பொருள்களுக்கு விலையேறும் என்று தெரியாது. வரவு – செலவு திட்டம் சும்மா பூச்சாண்டிக்காக போடும் விசயம்தான். அதன் பிறகு வர்த்த மானி மூலம் பொருட்களின் விலைகளை கூட்டிவிடுவார்கள். வழமையாக வரவு – செலவுதிட்டத்திலே சிகரெட்டின் விலையை மட்டும் தான் கூட்டுவார்கள். இன்று ஒரு இடத்திலேயும் கோலிப் (சிகரெட்) இல்லை. இப்போதே பதுக்கத் தொடங்கி விட்டார்கள் என்று தெரிவித்தார்.

# பொத்துவில் கடலில் மூழ்கி சிறுவன் பரிதாபச் சாவு



அம்பாறை – பொத்துவில் சின்ன புதுக்குடியிருப்பைச் சேர்ந்த 16 வயதான சிறுவன் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

நண்பர்களுடன் நேற்று முன்தினம் மாலை மீன்பிடிக்கச் சென்ற சிறுவன் வீடு திரும்புவதற்காக கொட்டுக்கல் முகத்துவாரத்தை கடக்க முற்பட்ட வேளையிலேயே நீரில் மூழ்கியுள்ளார்.

நேற்று முதல் கடற்படையினரும் பொலிஸாரும் இணைந்து தேடுதல் நடவடிக்கைகளை முன்னெடுத்த போதிலும் நேற்று பிற்பகல் வேளையிலேயே சிறுவன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

சடலம் பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் வைக்கப் பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொத்துவில் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



# அதிபர், ஆசிரியர்கள் கோரிக்கைகளை நிறைவேற்றுமாறுகோரி நடைபவனி

திருகோணமலையில் அதிபர் ஆசிரியர்களால் கொட்டும் மழையில் அரசாங்கத்திற்கு எதிராக மாபெரும் நடைபவனி ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டிருந்தனர்.

இன்று (09) திருகோணமலை சிவன் கோவில் முன்றலிலிருந்து நடைபவனியாக திருகோணமலை பிரதான பஸ் தரிப்பு நிலையம் வரை தமது எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இவ் ஆர்ப்பாட்டத்தின்போது ஊடகங்களுக்கு இவ்வாறு கருத்து தெரிவித்தனர்

நாடளாவிய ரீதியில் கடந்த ஆறு மாதங்களாக ஆசிரியர்கள் வீதிகளில் இறங்கி மழை, வெயில் என பாராமல் தமது சம்பள உயர்வினை கோரி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்

தயவு செய்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பஸில் ராஜபக்ஷ அவர்களும் கேட்டுக்கொள்வது ஆசிரியர்களை வீதிக்கு இறக்காமல் எமது நியாயமான சம்பள கோரிக்கையினை ஏற்றுக் கொண்டு அவர்களுக்கான தீர்வினையும் வழங்குமாறு கேட்டுக்கொண்டிருந்தனர்.

இவ் ஆர்ப்பாட்டத்தில் தமது கோரிக்கைகள் அடங்கிய பதாதைகளை ஏந்திய வண்ணம் கொட்டும் மழையினையும் பொருட்படுத்தாது நடைபவனியாக தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# காரைதீவு நந்தவனப்பிள்ளையார் ஆலய உண்டியல்கள் உடைப்பு



அம்பாறை மாவட்டம் காரைதீவு நந்தவனப்பிள்ளையார் ஆலயத்தின் நான்கு உண்டியல்கள் உடைக்கப்பட்டு திருட்டுச் சம்பவம் இடம் பெற்றுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

செவ்வாய் நள்ளிரவு 12.30 – 1.30மணி வரையில் திருடனொருவன் தலைக்கவசத்துடன் மாஸ்க் அணிந்து ஆலய மதில்மேல் ஏறி ஆலயத்திற்குள் சென்று சுமார் ஒரு மணி நேரம் திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளமை ஆலயத்தின் சி.சி.ரி.வி கமராவில் பதிவாகியுள்ளது.

சம்பவம் தொடர்பில் காரைதீவு மற்றும் சம்மாந்துறைப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் பொலிஸார் மேலதிக விசாரணைகளைமேற்கொண்டுள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு






# உலக பெண்கள் டென்னிஸ் தொடர் மெக்சிக்கோவில் இன்று ஆரம்பம்

உலகத் தரவரிசையில் முதல் 8 இடங்களிலுள்ள வீராங்கனைகள் மட்டும் கலந்து கொள்ளும் டபிள்யூ. டி.ஏ. இறுதிச் சுற்று என்று அழைக்கப்படும் உலக பெண்கள் டென்னிஸ் சம்பியன்ஷிப் போட்டித் தொடர் மெக்சிக்கோவில் இன்று முதல் 17 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்த போட்டித்தொடரில் இருந்து உலகின் முதல் நிலை வீராங்கனையும், நடப்பு சம்பியனுமான ஆஸ்திரேலியாவின் ஆஷ்லெ பார்டி விலகிவிட்டார். ஜனவரி மாதம் நடைபெற இருக்கும் ஆஸ்திரேலிய ஓபன் போட்டிக்கு தயாராகும் பொருட்டும், கொரோனாக் கட்டுப்பாட்டு விதிமுறைகளினுள் தொடர்ச்சியாக இருக்க வேண்டியிருந்ததால் அவற்றிலிருந்து விடுபட்டு ஓய்வெடுப்பதற்காகவும் இந்த முடிவை மேற்கொண்டேன் எனத் தெரிவித்திருந்தார்.

இதேபோல் தரவரிசையில் 7 ஆவது இடத்தில் உள்ள துனிசிய நாட்டு வீராங்கனை ஆன்ஸ் ஜாபிர் அடுத்த சீசனுக்கு தயாராகுவதற்கு வசதியாக ஒதுங்கினார். அவர்களுக்குப் பதிலாக தரவரிசையில் 9 ஆவது இடத்தில் இருக்கும் இகா ஸ்வியாடெக்கும், 10 ஆவது இடத்தில் உள்ள பௌலா படோசாவும் சேர்க்கப்பட்டனர்.

ஒற்றையர் பிரிவில் பங்கேற்கும் வீராங்கனைகள் இரண்டு பிரிவாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். அந்த பிரிவுகளுக்கு மெக்சிக்கோ நாட்டின் பழைமை வாய்ந்த நகரங்களின் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளது. இதில் 'சீச்சன் இட்சா' பிரிவில் சபலென்கா, மரியா சக்காரி, இகா ஸ்வியாடெக், பௌலா படோசா ஆகியோரும், 'தியோதி அகான்' பிரிவில் பார்போரா கிரெஸ்சிகோவா, கரோலினா பிளிஸ்கோவா, கார்பின் முகுருஜா, கோன்டா வெய்ட் ஆகியோரும் இடம் பிடித்துள்ளனர்.

இதில் ஒவ்வொரு வீராங்கனைகளும் தங்கள் பிரிவில் உள்ள மற்றவர்களுடன் தலா ஒரு முறை லீக் ஆட்டத்தில் மோத வேண்டும். லீக் முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் 2 இடங்களை பிடிப்பவர்கள் அரையிறுதிக்கு தகுதி பெறுவார்கள். இந்தத் தொடரில் பெண்கள் இரட்டையர் பிரிவிலும் போட்டிகள் நடைபெறுகின்றன. இதில் ஷூகோ அயமா–எனா ஷிபஹாரா, சமந்தா ஸ்டோசுர் – ஸாங் ஷுய் உள்பட 8 இணைகள் கலந்துகொள்கின்றனர்.




## மேற்கிந்தியத் தீவுகளுடனான தொடரில் லஹிரு திரிமன்ன விளையாடமாட்டார்

இலங்கை டெஸ்ட் கிரிக்கெட் அணியின் ஆரம்பத் துடுப்பாட்டவீரரான லஹிரு திரிமன்ன, மேற்கிந்தியத் தீவுகள் – இலங்கை அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இருந்து விலகுகிறார் எனத் தகவல் வெளியாகியுள்ளது. ஆஸ்திரேலியாவில் வசித்துவருகின்ற லஹிரு திரிமன்னவின் மனைவி, இரண்டாவது குழந்தையை எதிர்பார்த்திருப்பதன் காரணமாகவே அவர் இந்தத் தொடரிலிருந்து விலகியிருக்கிறார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆஸ்திரேலிய உள்ளூர் கிரிக்கெட் அணி ஒன்றுக்காக விளையாடிவரும் லஹிரு திரிமன்ன, இலங்கைத் தேசிய அணியிலிருந்து தனது ஓய்வினை விரைவில் அறிவித்துவிடுவார் என்று சமூகவலைத்தளங்களில் கலந்துரையாடல்கள் இடம்பெற்றுவந்தன. எனினும், ஓய்வு பெறும் விடயத்தினை மறுத்திருக்கும் லஹிரு திரிமன்ன, இந்த டெஸ்ட் தொடரிலிருந்து மாத்திரமே சொந்தக் காரணங்களுக்காக ஓய்வெடுத்துக்கொள்கிறேன் என அறிவித்திருக்கிறார். தொடர்ச்சியான வாய்ப்புகள் கிடைக்காதிருந்த லஹிரு திரிமன்ன, 2021ஆம் ஆண்டில் மீண்டும் இலங்கை அணிக்காக தொடர்ச்சியாக ஆடும் வாய்ப்பினைப் பெற்றார் இந்த ஆண்டு டெஸ்ட் போட்டிகளில் 13 இன்னிங்ஸ்களில் விளையாடி 659 ஓட்டங்களைக் குவித்திருப்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஆண்டு டெஸ்ட் போட்டிகளில் அதிக ஓட்டங்களைப் பெற்ற துடுப்பாட்டவீரர்கள் தரவரிசையில் மூன்றாவது இடத்தில் இவர் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இலங்கை – மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் இம்மாதம் 21 ஆம் திகதி காலியில்



## ரி–20 உலகக் கிண்ணத் தொடரின் முதலாவது அரையிறுதி இன்று!

ரி–20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் முதலாவது அரையிறுதிப்போட்டி இன்று நடைபெறவுள்ளது. இந்தப் போட்டியில் இங்கிலாந்து அணி, நியூசிலாந்தை எதிர்கொள்கிறது.

'சூப்பர்–12' சுற்று முடிவில் குழு 1 இல் முதல் 2 இடங்களைப் பிடித்த இங்கிலாந்து, ஆஸ்திரேலியா அணிகளும் குழு 2 இல் முதல் இரு இடங்களைத் தமதாக்கிய பாகிஸ்தான், நியூசிலாந்து அணிகளும் அரையிறுதிக்கு முன்னேறின. முன்னாள் சம்பியனான இங்கிலாந்து அணி 'சூப்பர்–12' சுற்று லீக் ஆட்டங்களில் நடப்பு சம்பியன் மேற்கிந்தியத் தீவுகள், பங்களாதேஷ், ஆஸ்திரேலியா, இலங்கை ஆகிய அணிகளை அடுத்தடுத்து வீழ்த்தியிருந்தது. கடைசி லீக் ஆட்டத்தில் 10 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தென்னாபிரிக்காவிடம் தோல்வியடைந்தது. நியூசிலாந்து அணி தனது முதல் போட்டியில் பாகிஸ்தானிடம் தோல்வியடைந்தது. ஆயினும், அடுத்த ஆட்டங்களில் இந்தியா, ஸ்கொட்லாந்து, நமீபியா, ஆப்கானிஸ்தான் அணிகளை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறியது.

ரி–20 போட்டிகளில் இவ்விரு அணிகளும் இதுவரை நேருக்கு நேர் 21 ஆட்டங்களில் ஒன்றையொன்று எதிர்கொண்டிருக்கின்றன. இதில் இங்கிலாந்து அணி 12 இலும், நியூசிலாந்து அணி 7 இலும் வெற்றி பெற்றுள்ளன. ஒரு ஆட்டம் சமநிலையில் முடிந்ததோடு, ஒரு போட்டி முடிவு இல்லாமல் கைவிடப்பட்டிருந்தது.

## ஆசிரியர்களுக்கு அச்சுறுத்தல்;

# பிரதேச சபை உப தவிசாளர் உள்ளிட்ட மூன்று பேர் கைது

இலங்கையின் கேகாலை மாவட்ட, மாவனல்லை பிரதேசசபையின்பிரதிதவிசாளர்மற்றும்இரண்டுஉறுப்பினர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆசிரியர்கள் அண்மையில் மெதிரிகம பாடசாலையில் ஆர்ப்பாட்டமொன்றை நடத்திய போது அவர்களை அச்சுறுத்திய குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் சம்பவம் தொடர்பில் சந்தேகநபர்கள் தற்போது விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர் எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

# மண்ணெண்ணெய் விற்பனை; கட்டுப்பாடு விதிக்கப்படுமாம்

## அமைச்சர் கம்மன்பில அறிவிப்பு



விவசாயிகள் மற்றும் மீனவர்கள் இல்லாத பகுதிகளுக்கு மண்ணெண்ணெய் விநியோகம் செய்வது கட்டுப்படுத்தப்படும் என எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார். அண்மைக்காலமாகமண்ணெண்ணெய் தேவைஇரட்டிப்பாகியுள்ளதுஎனஅமைச்சர்ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிடும் போது குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய இந்த நாள்களில் நாளாந்தம் சுமார் 550 மெற்றிக் தொன் மண்ணெண்ணெய் விற்பனை செய்யப்படுவதாக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மண்ணெண்ணெய் விற்பனையால் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு நாளொன்றுக்கு 2.3 கோடி ரூபா நட்டம் ஏற்படுகின்றது.

நவம்பர் மாதம் 3 ஆம் திகதி மின்சார சபை ஆர்ப்பாட்டம் காரணமாக மின்சாரம் தடைப்படும் என கட்டுக்கதை ஒன்று பரவியது. இதனால் அதிகளவில் மண்ணெண்ணெயை மக்கள் கொள்வனவு செய்தமையாலேயே பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. பஸ்களுக்கு மண்ணெண்ணெய் விநியோகிக்கும் நிலையில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இல்லை.

இதனால் விவசாயிகள் மற்றும் மீனவர்கள் இல்லாத பகுதிகளுக்கு மண்ணெண்ணெய் விநியோகிப்பது கட்டுப்படுத்தப்படும் என அமைச்சர் உதய கம்மன்பில ஊடகவியலாளர் சந்திப்பில் மேலும் தெரிவித்துள்ளார்.

# சீன மக்களின் குப்பைகளை கொட்டுமிடம் இலங்கையல்ல!

## சரத் பொன்சேகா சீற்றம்



சீனாவின் குப்பைகளை ஏற்றிய கப்பல் ஒன்று இன்று இலங்கையைச்சுற்றிக்கொண்டிருக்கின்றது. சீன மக்களின் குப்பைகளைக் கொட்டுவதற்கான இடம் இலங்கை அல்ல என பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பிலும் மேலும் தெரிவிக்கையில் –

மிகவும் துரதிர்ஷ்டமான ஒரு விடயம் இன்று விவசாயிகள், விவசாய நிலத்தில் அல்ல வீதியில் நிற்கின்றார்கள். அரசாங்கத்துக்கு எதிராகப் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

சீனாவின் குப்பைகளை ஏற்றிய கப்பல் ஒன்று இன்று இலங்கையைச்சுற்றிக்கொண்டிருக்கின்றது. சீன மக்களின் குப்பைகளைக் கொட்டுவதற்கான இடம் இலங்கை அல்ல. சீனா எவ்வளவு பெரிய நாடாக இருந்தாலும் பரவாயில்லை, அவர்களின் தாளத்திற்கு எம்மால் ஆட முடியாது. அரசாங்கமும் இதனைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்த நாட்டின் கௌரவத்தை அரசாங்கம் பாதுகாக்க வேண்டும். இது இறையாண்மை உள்ள ஒரு நாடு. இவற்றைப் பாதுகாக்கும் வகையில் வெளிநாடுகளுடன் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ள வேண்டும்.

சீன அரசாங்கம் இந்த விடயத்தில் மிகவும் வெட்கக்கேடான முறையில் செயற்படுகின்றது. இலங்கையில் ஒரு விசித்திரமான ஒரு விலங்கு இனம் வாழ்வதாகவே சீனத் தூதுவர் நினைத்துக்கொண்டுள்ளார்.

இந்தநாட்டுக்குப்பாதிப்பானஎந்தவிடயத்துக்கும் நாம் இடமளிக்கப்போவது இல்லை. ஆகவே அவரது குப்பையுடனான கப்பலை அவரது நாட்டுக்கே கொண்டு சென்று எங்கேயாவது இறக்கிக்கொள்ளுமாறு நாம் கோரிக்கை விடுக்கின்றோம். – எனத் தெரிவித்துள்ளார்.

# கொவிட் தொற்றால் பாடசாலைகள் பூட்டு!

## கெப்பிற்றிகொல்லாவவில் சம்பவம்

கெப்பிற்றிகொல்லாவ வலயக்கல்வி நான்கு பாடசாலைகள் எதிர்வரும் 14 நாள்களுக்கு மூடப்படுகின்றன என வலயக் கல்விப் பணிப்பாளர் குமுதுனி ஆரியவன்ஸ தெரிவித்துள்ளார்.

பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பலர் கொவிட் தொற்றுக்குள்ளாகியமையால் 4 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன.

பல பாடசாலைகளில் கொவிட் தொற்று பரவ ஆரம்பித்துள்ளதாக கெப்பிற்றிகொல்லாவ சுகாதார வைத்திய அதிகாரி கே.எம்.சி.மிஹிரங்க பண்டார தெரிவித்துள்ளார்.

இதற்கு மேலதிகமாக பாடசாலைகளில் ஆசிரியர்களும் கொவிட் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். அவ்வாறு ஆசிரியர் தொற்றுக்குள்ளாகிய பாடசாலைகளின் வகுப்புகள் மூடப்பட்டு, மாணவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை குறித்த பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட ரெபிட் அன்டிஜன் பரிசோதனையில் 26 பேர் கொவிட் தொற்றாளர்கள் என உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர்களுக்குள் கர்ப்பிணிப் பெண் மற்றும் கைக்குழந்தைகளும் உள்ளடங்குகின்றனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அநுராதபுரம் மாவட்டத்தில் அடையாளம் காணப்படும் கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு நிலை ஏற்பட்டுள்ளது. திங்கட்கிழமை 250 இற்கும் அதிகமான கொவிட் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

முன்னதாக பாடசாலைகள் திறக்கப்பட்டமையையடுத்து பாடசாலை கொத்தணி உருவாகும் சாத்தியம் இருப்பதாக சுகாதாரப் பிரிவினர் சிலர் எச்சரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# முல்லைத்தீவு கடற்கரையில் கரையொதுங்கும் தாவரங்கள்





சீரற்ற காலநிலை காரணமாக வடக்கில் தொடர்ந்து பெய்துவரும் கனமழையால் முல்லைத்தீவு மாவட்டத்திலும் தாழ்நிலப் பகுதிகள் பல வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இதேவேளை முல்லைத்தீவில் கடல் கொந்தளிப்பாகக் காணப்படுவதோடு கடற்கரையில் தாவரங்கள் பல கரையொதுங்கி வருகின்றன. தொடரும் சீரற்ற காலநிலை காரணமாகக் கடல் கொந்தளிப்பாகக் காணப்படும் நிலையில் மீனவர்கள் எவரும் தொழிலுக்குச் செல்லவில்லை. முல்லைத்தீவு கடற்கரையில் பல கிலோமீற்றர் தூரத்துக்கு தாவரங்கள் கரையொதுங்கியுள்ளன. இதனால் மீனவர்களின் மீன்பிடித் தொழிலுக்கு பாரிய சவால் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை நேற்று யாழ்ப்பாண கடற்கரையிலும் இவ்வாறு கடற்தாவரங்கள் கரையொதுங்கி இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.11.2021இல் வெளியிடப்பெற்றது.